[2014 ஆகஸ்ட் 7

370—

சமுதாயக் கூடம்

*34496—**திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெட்டன்விடுதி ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி தாலுகா, கண்ணக்கன்காடு ஊராட்சி, வெட்டன்விடுதி ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசிடம் எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மம், தானம், கருணை, பாசம், ஈவு, இரக்கம் இவற்றின் மறு உருவான! ஏழைகளின் இல்லத்தில் அறிவு தீபம் ஏற்றுவதையே தன் இலக்காகக் கொண்டு நாளும் செயல்படும் தர்ம தேவதை, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டன்விடுதி ஆதி திராவிடர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம்

2014 ஆகஸ்ட் 7]

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் இந்த மூன்று ஆண்டு பொற்கால ஆட்சியில்தான், 2011-2012 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் ரூ.100 இலட்சம் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.150 இலட்சம் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.45 இலட்சம் செலவில் 3 சமுதாயக் கூடங்களும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கறம்பக்குடி தாலுகா, கண்ணக்கன்காடு ஊராட்சி, வெட்டன்விடுதியில் வசிக்கும் மொத்த மக்கள்தொகை 2,840 ஆகும். இங்கு 150 ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர். மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வெட்டன்விடுதியில், 40 சதவிகிதத்திற்கும் குறைவான ஆதி திராவிட மக்கள் குடியிருப்பதால், விதிமுறைகளின்படி, இக்கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட இயலாது. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் விரும்பினால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு விருப்ப நிதியிலிருந்து எடுத்துச் செய்யலாம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 371, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*